நாள்: 07.11.2024
OS.260/2020
பெயர்: சவரிமுத்து
வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க எந்தவொரு அழைப்பாணையும் வரவில்லை என்றால் சரிதான். நான் வாதி அறிவாளனுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் பதிவு செய்யப்பட்ட ஆவண எழுத்தர் கிடையாது. நான் மருந்தாளுநர் படிப்பு படித்துள்ளேன். வாதி என்னுடைய நண்பர். வா.சா.ஆ.1 புரோநோட்டில் 6 லட்சம் என எண்ணால் எழுதப்பட்டுள்ள எழுத்தில் திருத்தம் உள்ளது என்றால் அதை நான் எழுதவில்லை. மணிகண்டன் தான் அதை எழுதினார். வா.சா.ஆ.2 புரோநோட்டில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களுக்குள் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். 02.07.2017 மற்றும் 04.05.2017 ஆகிய தேதிகளில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே எந்த பண பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றும், வாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 புரோநோட்டுக்களை தயார் செய்வதற்கு முன்னர் வழக்கு தரப்பினர்களுக்கிடையே என்ன பேச்சுவார்த்தை நடந்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. மணிகண்டன் வாதியிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றும், அதற்காக எந்த புரோநோட்டுக்களும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, 2 புரோநோட்டுக்களில் சாட்சிகளாக ஜெகநாதனும், ரோகமணியும் சாட்சிகளாக கையொப்பம் எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னுடைய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.